सत्यमेव जयते

**இந்தியத் துணைத்தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**25 செப்ரெம்பர் 2013**

**செய்திக்குறிப்பு**

யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதரகத்தில்
பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவால் தொகுக்கப்பட்ட **“தெறிப்புப் படிமம்”**
(Mirrored Images) கவிதைத் தொகுப்பு வெளியீடு.
திங்கட்கிழமை, 30 செப்ரெம்பர் 2013.

பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க (பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை), அவர்களால் தொகுக்கப்பட்டு இந்திய தேசிய புத்தக நிதியத்தால் வெளியிடப்படும் **தெறிப்புப் படிமம்** எனும் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதரகத்தினால் வெளியீடு செய்து வைக்கப்படுகிறது. இந்நிகழ்வு இல.14, மருதடி ஒழுங்கை, நல்லூரிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் திங்கட்கிழமை, 30 செப்ரெம்பர் 2013 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்.

இலங்கையின் மொழிகளில் எழுத்தாளர்களால் எடுத்தாளப்பட்ட பல்வேறு பொதுவான கருப்பொருள்களில் அமைந்த நிரவுரு, அன்பு, அரசியல் மற்றும் தத்துவம் பற்றிய கவிதைகளை இத்தொகுதி கொண்டுள்ளது. தமிழ் மொழியிலமைந்த கவிதைகளுக்கு மிகமுக்கியமான புலமையாளரான செல்வா கனகநாயகம் அவர்களும் சிங்கள மொழியிலமைந்த கவிதைகளுக்கு லியனகே அமரகீர்த்தி அவர்களும் முன்னுரை வழங்கியுள்ளனர். இவர்களிருவரும் முக்கியமான புலமையாளர்களாவர். இப்புத்தகம் கிட்டத்தட்ட 100 இலங்கைக் கவிஞர்களையும் லக்ஷ்மி டி சில்வா, ரஞ்சினி ஒபேசேகரா, லக்ஷ்மி ஹோம்ஸ்ட்ரோம் மற்றும் ஏ.ஜே கனகரட்ணா ஆகியோரால் செய்யப்பட்ட கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புத்தக வெளியீட்டைத் தொடர்ந்து திரு.பா.அகிலன், திரு.அ.யேசுராசா, திரு.கருணாகரன், திரு.சோ.பத்மநாதன், திரு.சித்தாந்தன், திரு விவேக் திரு. ஐ..சாந்தன் ஆகியோரின் தமிழ்க்கவிதை வாசிப்பும் திரு ஆரியவன்ச ரணவீரசிங்கவின் சிங்களக் கவிதை வாசிப்பும் இடம்பெறும்.

இந்திய தேசிய புத்தக நிதியமானது ‘‘தொடர்புகளை ஏற்படுத்தல்: இலங்கைச் சிறுகதைகளின் தொகுதி’’ எனும் ரஜீவ விஜேசிங்கவினால் மும்மொழிகளிலிருந்தும் தொகுக்கப்பட்ட புத்தகைத்தை முன்னர் வெளியிட்டிருந்தது. இப்புத்தகமானது மராத்தி, தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. ரஜீவ விஜேசிங்க அவர்கள் ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி, பின்னர் வேறு பல்கலைக்கழகங்களில் கடமையாற்றி அதன்பின்னர் இலங்கை சமாதான செயலகத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். இவர் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஜனாதிபதிக்கான நல்லிணக்கம் பற்றிய ஆலோசகருமாவார்.

******